**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி**
**அ.வ.எண்.7/2024**

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10 வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2025 ஆண்டு ஏப்ரல் மாதம் 09 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : லட்சுமியம்மாள் | மதம் | : இந்து |
| க/பெ | : நரச மந்தடி | ஜாதி | : -- |
| வயது | : 82 | கிராமம் | : குமாரகுப்பம் |
| தொழில் : | இல்லத்தரசி | வட்டம் | : திருத்தணி |

**09.04.2025**

**வா.சா. 1 ன் முதல் விசாரணை**

1. நான் இவ்வழக்கில் வாதி ஆவேன். வாதி தரப்பு 1ம் சாட்சியாக சாட்சியம் அளிக்கிறேன். என் தரப்பில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். எனது பிரமாண வாக்குமூலத்தை நான் சொல்லித்தான் என்னுடைய வழக்கறிஞர் தயார் செய்தார். அதில் உள்ள விவரங்கள் எனக்கு நன்கு தெரியும். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கைரேகை என்னுடையதுதான். 11.11.1981ம் தேதியிட்டு என் மகன் பாலன் என்ற பாலகிருஷ்ணன் பெயரில் உள்ள கிரைய ஆவணம் இணையவழி பதிவிறக்க நகல் தாக்கல் செய்கிறேன். **(கிரைய ஆவணம் வா.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** 07.04.2016ம் தேதியிட்டு 3ம் பிரதிவாதிக்கு 2ம் பிரதிவாதி மற்றும் அருண்பாண்டியன் எழுதி கொடுத்த கிரைய ஆவணம் இணையவழி பதிவிறக்க நகல் தாக்கல் செய்கிறேன். **(கிரைய ஆவணம் வா.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

2. 16.06.2021ம் தேதியிட்டு 3ம் பிரதிவாதி 1ம் பிரதிவாதிக்கு எழுதி கொடுத்த கிரைய ஆவணம் இணையவழி பதிவிறக்க நகல் தாக்கல் செய்கிறேன். **(கிரைய ஆவணம் வா.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

(முதல் விசாரணை தொடர்ச்சி ஆவணங்கள் குறியீடு செய்ய வேண்டி வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது)